# அரசு தீர்வை முன்வைத்தால் பரிசீலிக்கத் தயார்!

பொதுசன நூலகம் மாநகராட்சி மன்றம் 31-10-1993 யாழ்ப்பாணம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 85 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 14 இதழ் 255
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 30-10-1993

## கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

(கொழும்பு) ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றை அரசு முன்வைக்குமானால் அதனைப் பரிசீலிப்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருப்பதாக விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பத்திரிகையாளர் குழு ஒன்றைச் சந்தித்தபோது திரு. அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்ததாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

(4-ம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கு வருமாறு புலிகளுக்கு அழைப்பு

(கொழும்பு) விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேச்சு நடத்த அரசாங்கம் தயாராக இருக்கிறது. இப்போதுகூட புலிகள் இயக்கத்தினர் பேச்சுவார்த்தைக்கு முன்வரலாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டொன்றில் தெரிவித்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் இனப்போருக்கு சிங்கள அரசுகளே காரணம்

## - பிரி. அகதிகள் மன்றம் குற்றச்சாட்டு -

(லண்டன்)

சிறிலங்காவின் ஆட்சிபீடத்தில் அமர்ந்த பல்வேறு அரசுகளே இலங்கையில் இனப்போர் ஏற்படுவதற்கு காரணமாயிருந்தன என்று பிரிட்டனிலுள்ள அகதிகள் நலன் காக்கும் குழுவான பிரிட்டிஷ் அகதிகள் கவுன்சில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நடந்த பத்தாண்டு காலமாக போர், பேரழிவு பல்லாயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளார்கள் என்பதெல்லாம் உண்மைதான். சாதாரணமாக இலங்கை மக்கள் அனைவரும் இணக்கமாகவே வாழ விரும்பு... அவர்கள் எல்லாவற்றையும்விட அமைதியையே விரும்புகிறார்கள். நடு

(4-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடைபெற்றால் ரத்தக்களரி ஏற்படும்

(கொழும்பு) கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்தப்பட்டால் அது ஒரு இரத்தக்களரியை அங்கு ஏற்படுத்த வழிவகுக்கும் என தமிழ் அரசியல்வாதிகள் அஞ்சுகின்றனர். கிழக்கில் தேர்தல்கள் நடத்தப்படவேண்டுமென்பதில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா உறுதியாக இருக்கிறார். கிழக்கு மாகாணம் ஒரு தேர்தலை எதிர்கொள்ளும் அள

(4-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி நிலைமைகள் மிக மோசமாகவுள்ளன

(லண்டன்) வடக்கின் நிலைமைகள் மோசமாகவுள்ளன. அங்கு மின்சாரமில்லை, எரிபொருள் இல்லை, அத்தியாவசியப் பொருட்கள் இல்லை. இந்த நிலையில் யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் எவ்வாறு ஒரு சாதாரண வாழ்க்கையை வாழ முடியும். இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் டி. டி. அபயசிங்கா லண்டனில் வைத்து பி. பி. ஸிக்களித்த பேட்டியில் இவ்வாறு தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா விபத்தில் இரு பொலிஸார் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்) வவுனியாப் பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் ஸ்ரீலங்கா பொலிஸார் இருவர் உயிரிழந்தனர். டிரக் வண்டி ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதியதாலே இந்த உயிரிழப்பு ஏற்பட்டது. ஹொரவப்பொத்தானை வீதியிலுள்ள மாமடு சந்தி

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்திய தூதரகத்தை முஸ்லீம்கள் தாக்கலாம்!

### ராணுவம் பாதுகாப்பு

(கொழும்பு) கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தை முஸ்லிம்கள் தாக்கக்கூடுமென அச்சத்தினால் தூதரகத்தை சுற்றி பலத்த இராணுவப் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்திலுள்ள மசூதியை இந்திய இராணுவம் சுற்றி வளைத்திருப்பதை ஆட்சேபித்து நேற்று வெள்ளிக்கிழமை தொழுகை முடிந்ததும் இந்திய தூதரகத்தின்

(4ம் பக்கம் பார்க்க)

## கிழக்கிலும் வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தல் ஜனவரியில் நடாத்தப்படும்

(கொழும்பு) கிழக்கு மாகாணத்திலும் வவுனியா மாவட்டத்திலும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்படுமென ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க தெரிவித்துள்ளார். இரத்தினபுரியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இதனை தெரிவித்த ஜனாதிபதி மேலும் கூறுகையில்-

(4-ம் பக்கம் பார்க்க)

✶ யாழ். மாவட்டத்தில்

## சேதமடைந்த வீடுகளை திருத்த 170 கோடி ரூபா ஒதுக்கீடு!

(யாழ்ப்பாணம்) யாழ் மாவட்டத்தில் சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கு அரசு 170 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாக யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி தெரிவிக்கையில் கூறியதாவது: 1990ம் ஆண்டுக்கு முன் யாழ் மாவட்டத்தில் சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கே மேற்படி பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் செயலாளர் திரு ஆர். பாஸ்கரலிங்கம் தலைமையில் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

1990-ம் ஆண்டுக்கு முன் சேதமடைந்த வீடுகளின் விபரங்களும், அவற்றுக்கு வழங்கப்படவேண்டிய பணம் எவ்வளவு என்பது பற்றியும் முன்பே

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழா!
வழிவிட்டு, வழிவிட்டு
வாழ்விடம் இழந்துவிட்டோம்
இனித் தலைநிமிர்ந்து கொள்வோம்
போராட்டமே புதுவாழ்வு தரும்.

## அநுரா லண்டனிலிருந்து நேற்று நாடு திரும்பினர்

(கொழும்பு) திரு. அநுர பண்டாரநாயக்கா நேற்று லண்டனிலிருந்து நாடு திரும்பினார். இவரை பல சுதந்திரக்கட்சி எம். பி.க்களும் அவரது ஆதரவாளர்களும் விமான நிலையத்

(4ம் பக்கம் பார்க்க)

## ஆளுநராக அநுரா

### சுதந்திரக்கட்சி அச்சம்

(கொழும்பு) மேல் மாகாண ஆளுநர் பதவியிலிருந்து திரு. சர்வானந்தாவை அகற்றிவிட்டு அநுராவை ஆளுநராக அரசு நியமிக்கலாமென சுதந்திரக் கட்சியினர் அச்சங்கொள்கின்றனராம். ஆனால் இப்படிச் செய்வதற்கான தீர்மானம் எதையும் அரசு எடுக்கவில்லையென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### நாளை செவ்வாய் மாற்றம்

அக்டோபர் வியாழன், சனி மாற்றங்களும் அடங்கியவை ரூ. 10/- தீபாவளி வாழ்த்துக்கள், பாடசாலை உபகரணங்கள் விற்பனையாகின்றன. வடிவேல் புத்தகசாலை, K. K. S. வீதி, யாழ்ப்பாணம். (சி-561)

### வைத்தியம்

செங்கண்மாரி, (Hepatitis) குடற்புண், ஈரல், வாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை சாலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி கி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (இ-547)

### மிருதங்கம்

இரண்டு நாட்களுக்குள் தோல் வாத்தியங்கள் யாவும் சுத்தமாக சாதம் போட்டுத் தரப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் 192/1 நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (கி-557)

## பனை அபிவிருத்திச் சபை

மரம் நடுகை வாரம் - (26-10-93 01-11-93)

### பனம் விதை நடுகை

மரம் நடுகை வாரத்தையொட்டி, யாழ். மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் பனம்விதைகள் நடுகை இயக்கத்தைச் சபை மேற்கொண்டுள்ளது. விதைகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ள விரும்பும் சமூக சேவை ஸ்தாபனங்கள் மற்றும் தனியார் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:-

அபிவிருத்தி உத்தியோகத்தர்.
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

''பனை வளர்ப்போம்; பனையால் வளர்வோம்''

(எ-3543)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி சிவ ஞானவைரவர் கோவிலில் இன்று மகாகும்பாபிஷேகம், சங்காபிஷேகமும் மணவாளக் கோல விழாவும் திருவூஞ்சற்பா மலர் வெளியீடும் இடம் பெறும். இதன்போது இவ் ஊஞ்சற்பாக்களை இயற்றிய கவிஞர் நாவன்மாக்கட்டு இ. முருகதாசன் கௌரவிக்கப்படுவார். திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) ஆசியுரை நிகழ்த்துவார். -சி

0 0 0

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அடைக்கலத் தோட்டம் அருள்மிகு கந்தசுவாமியார் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை முப 9 மணிக்கு இராமலிங்க அடிகளாரின் 'சிந்தனைகள்' என்னும் பொருள்பற்றி திரு. பொ. தளையபரலிங்கம் சொற்பொழிவு ஆற்றுவார்.

0 0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் ஐயனார் ஆலய மாதாந்த திருவிளக்கு - சுமங்கலி பூசைகள் இன்று 30ம் திகதி சனிக்கிழமை மாலை ஆறு மணிக்கு நடைபெறும். -154

0 0 0

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் 33வது ஆண்டுப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை மு. ப 10 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். ப. நோ. கூ. சங்க விளையாட்டுக் கழகம், யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கங்களுக்கிடையே நடாத்தும் மாவீரர் வெற்றிக்கிண்ணத்திற்கான சுற்றுப் போட்டிகள் (7 பேர் கொண்ட 12 ஓவர் மென்பந்து கிரிக்கெட்) யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இன்று 30ம் திகதியும் நாளை 31ம் திகதியும் நடைபெறும்.

0 0 0

(கொழும்புத்துறை

சரசாலை இலந்தைத்திடல் அருள்மிகு ஸ்ரீ வீரகாளி அம்பாள் கோவிலில் இன்று 30ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 8 மணிக்கு விசேட மங்கல தீப பூசை ஆராதனை வழிபாடுகள் இடம்பெறும். -154

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்டத்தின் முழுநிலா சந்திப்பு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு 20, ஆறுமுகம் ஒழுங்கை, கண்டிக்குளி இல்லத்தில் நடைபெறும். இன்றைய நிகழ்வின்போது சிறுகதைப்போட்டி, மதிப்

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடத்தும்

# "3வது" வதிவிட வேளாண்மைப் போட்டி

## 1993/1994 யாழ், மாவட்டம்

தமிழீழ விடுதலைப் போராட்டமானது பேரினவாத ஒடுக்குமுறைகளில் இருந்து எம் மக்களை விடுவிப்பதோடு மட்டும் நிற்கவில்லை. சார்ந்து நிற்கும் பொருளாதார நிலையில் இருந்து தமிழ் மக்களை விடுபடச் செய்து எமது சொந்த மண்ணில் சொந்தக் கால்களில் தங்கிநிற்கும் தன்னிறைவான பொருளாதார வாழ்வைக் கட்டி எழுப்புவதற்கு வழி வகுத்துள்ளது.

இப்பணியில் செயற்பட்டு வரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழ மக்கள் அனைவருமே இன்று எதிர்கொண்டுள்ள பாரிய பொருளாதார சுமையினின்றும் விடுபட பல்வேறு செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்தி வருகிறது.

இவ்வாறாக வதிவிட வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்களை ஊக்கப்படுத்தும் விதமாகவும் இரண்டாவது முறையாக 1993/94 காலப் பகுதியில் யாழ். குடா நாட்டிலுள்ள குடியிருப்பாளர்களை உற்பத்தி முயற்சியில் ஈடுபட வைக்கவும் வதிவிட வேளாண்மைப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே அனைத்து குடியிருப்பாளர்களும் தமது வீடு அமைந்துள்ள காணியில் அல்லது வதிவிடத்திற்கு அண்மையாக உள்ள 4பரப்புக்குட்பட்ட காணியில் வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டு தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு பரிசில்களையும் பெற்றுக் கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வேண்டுகோள் விடுக்கிறது.

போட்டிகளுக்கான நிபந்தனைகள்:-

01. வீடு அமைந்திருக்கும் வசதிக்கேற்ப வதிவிட பயிற்செய்கையை கவர்ச்சிகரமாக அமைத்தல்.

02. 10 அடி நீளமும் 3 அடி அகலமும் ஆன பாத்திகளில் உள்நாட்டு மரக்கறிப்பயிர்களான வெண்டி, மிளகாய், புடோல், பயிற்றை, கத்தரி, புடோல், பாகல், தக்காளி, பீர்க்கு, அவரை, போன்றவையும் மேல்நாட்டு மரக்கறிப் பயிர்களான போஞ்சி, முள்ளங்கி, பூக்கோவா, பீற்றூட், கரட் போன்றவையும் இவற்றுள் குறைந்தது (5) ஐந்து வகை பயிர் இனங்களில் (3) மூன்று உள்நாட்டு மரக்கறி வகைகளும் மேல் நாட்டு மரக்கறி வகைகளில் இரண்டும் (2) செய்கை பண்ணப்பட்டு இருத்தல் வேண்டும்.
அத்துடன் மரவள்ளி, வற்றாளை போன்ற கிழங்கு வகைப் பயிர்களில் ஒன்று முக்கியமாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.
சோளம், கம்பு, இறுங்கு போன்ற தானியப் பயிர்களில் ஏதாவது ஒன்று முக்கியமாக பயிரிடப்பட்டிருத்தல் வேண்டும்.

03. 10 அடி நீளமும் 3 அடி அகலமுமான பாத்திகளில் இலை வகைகள் மரக்கறிப் பயிர்களான பொன்னாங்காணி, முளைக்கீரை, பசளி, வல்லாரை, ஆகியவற்றில் குறைந்தது இரண்டு வகை இருத்தல்வேண்டும். அத்தோடு அகத்தி, முருங்கை, தூதுவளை, சண்டி, முல்லை, முசுட்டை ஆகியவற்றில் குறைந்தது இரண்டு இனமாதல் இருத்தல் வேண்டும்.

04. மஞ்சள், இஞ்சி, பெருஞ்சீரகம், வெந்தயம், மல்லி, கருவேற்பிலை, றம்பை போன்ற இனங்களில் மூன்று (3) நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

05. பழ மரங்களான பப்பாசி, வாழை, மாக்கொய்யா, தோடை, மாதுளை, கொடித்தோடை, பலா, எலுமிச்சை ஆகியவற்றுள் 4 மரங்கள் புதிதாக நாட்டப்பட்டிருத்தல்வேண்டும்.

06. பயனுள்ள மரங்களான தென்னை ஒன்று அல்லது வேம்பு இரண்டு ஆகியவை புதிதாக நாட்டப்பட்டிருத்தல்வேண்டும்.

07. கூட்டெரு குழி முறையிலோ, குவியல் முறையிலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டும்.

08 தேனி வளர்த்தல்:

குறைந்தது ஓர் பெட்டியிலாவது அல்லது மரக் கொட்டுகளிலாவது வளர்ப்பில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

09 கோழி வளர்த்தல்:

குறைந்தது (10) பத்து கோழிகள் (கூடு அமைப்பு) கலப்பு முறையில் வளர்த்தல்வேண்டும்.

10 தாரா ஒரு சோடி வளர்த்தல்வேண்டும். அல்லது அதற்கு பதிலாக 5 கோழிகள் கூடுதலாக வளர்க்கவேண்டும்.

11. பசு மாடு ஒன்று அல்லது மறிஆடு ஒன்று வளர்க்கப்படவேண்டும். இவை இரண்டையும் வளர்ப்பவர்களுக்கு கூடிய புள்ளிகள் வழங்கப்படும்.

12. முயல் குறைந்தது ஒரு சோடி வளர்க்கப்படல் வேண்டும்.

13. விலங்கு தீவனமாக புல்லினம், இப்பில் இப்பில், முள்முருக்கை, சீமைக்கிளுவை என்பன இருத்தல்வேண்டும்.

14 பதிவேடு பேணல்:

மரக்கறி பயிர். கால்நடை வளர்ப்பிற்கானவை தனித்தனி பேணப்படல்வேண்டும்.

குறிப்பு:

விண்ணப்பப்படிவங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் யாழ். மாவட்ட செயலகம், கோட்டச் செயலகங்கள், கிராமிய உற்பத்திக்குழு வட்ட தொடர்பாளர்கள் அலுவலகங்களில் பெற்று பூரணப்படுத்தி 15-11-1993ஆம் திகதி திங்கட்கிழமை நேரடியாகவோ அல்லது கடிதமூலமாகவோ மேற்குறித்த அலுவலகங்களில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலதிகமாகத் தேவைப்படும் விபரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன, மாவட்ட, கோட்ட, வட்ட அலுவலகங்களிலும், கமநல சேவைத் திணைக்களங்களிலும் விவசாய போதனாசிரியர்களிடமும் அரச சார்பற்ற நிறுவனங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மரக்கறி விதைகள் விண்ணப்பதாரிகளுக்கான பயிற்சிக் கூட்டத்தில் வைத்து இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இப்போட்டியில் கலந்துகொள்வோர் 15-11-93 தொடக்கம் 15-12-93 வரையுள்ள காலப்பகுதிக்குட்பட்ட நாட்களில் அனைத்துப் பயிர்களும் நாட்டப்பட்டிருத்தல்வேண்டும்.

### போட்டிகள் பார்வையிடும் காலம்:

முதலாம் கட்டபார்வையிடுதல்
01 - 01-94 தொடக்கம் 20 - 01 - 1994 வரையுள்ள காலப்பகுதி

இரண்டாம் கட்ட பார்வையிடுதல்
01 - 02 - 1994 தொடக்கம் 15 - 02 - 1994 வரை

இறுதிக் கட்டபார்வையிடுதல்
20 - 02 - 1994 தொடக்கம் 29 - 02 - 1994 வரை

(ஏ-3542)

மணிவாசகர்

சுதந்திரத்தில் பற்றுக் கொண்டவர்கள் சுதந்திரம் அடைவார்கள் என்பது உறுதி.
- எட்மண்ட்பர்க்

# வறுமையில்வாடும்சிறுவர்க்கு ரூ.400 முதல் 750வரை நிதியுதவி

## தமிழர் புனர்வாழ்வு கழகம் வழங்கும்

(யாழ்ப்பாணம்) வடக்கு கிழக்கில் கல்வி கிழக்கில் உள்ள வறுமையில் கல்வியைத் தொடரமுடியாத சிறுவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பல நன்மையான திட்டங்களை அமுல் படுத்தவுள்ளது.

இதன்பிரகாரம் வடக்கு கிழக்கில் உள்ள வறுமையில் வாடும் 1000 சிறுவர்களுக்கு மாதாந்தம் 400 ரூபாவில் இருந்து 750 ரூபாவரை நிதி உதவி அளிக்கவுள்ளார்கள்.

இராணுவ நடவடிக்கைகளாலும் பிற காரணங்களாலும் தாய் தந்தையை இழந்த சிறுவர்களுக்கு பல சிறுவர் இல்லங்களை அமைத்து, கல்வியைச்சோதிப்பதற்கு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பல வருட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பல சேவைகளை செய்துவருவதும் குறிப்பிடத்தக்கது. (ம-சி)

## மாணவருக்கு வெளிச்ச வசதி

(கொழும்புத்துறை)

நாவாந்துறை சென். மேரீஸ் சனசமூக நிலையத்தினர் வறிய மாணவர்கள் இரவு நேரத்தில் தமது கல்வியைத் தொடர்வதற்கு வசதியாக பெற்றோமாக்ஸ் வசதியைச் செய்து கொடுத்துள்ளனர்.

இம்மாதம் முதல் நடத்தப்பட்டுவரும் இந்த இலவச சேவையில் பயன்படும் வசதியைத் தமிழீழ விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினர் செய்து கொடுத்துள்ளனர்.

இவ்விலவச சேவை மூலம் சுமார் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன் பெற்று வருவதாக நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். —154

# நமது நோக்கு

## மக்களின் விடுதலைக்காக..!

பத்தாண்டுகளுக்கு மேலாக இந்த நாட்டிலே ஒரு ஆயுதப் போராட்டம் நடந்து கொண்டிருக்கின்றது.

இந்தப் போரின் இலட்சியம் என்ன? பல மாவீரர்களை இழந்து கொண்டு, பல பொருட் சேதங்களைச் சந்தித்துக் கொண்டு, சர்வதேசத்தின் கவனத்தைக் கவர்ந்து கொண்டு நடக்கும் இப் போரின் தாற்பரியம் என்ன?

தலைவர் பிரபாகரன் கருத்துத் தொகுப்பாக, "எனது மக்களின் விடுதலைக்காக..." என்ற நூல் வெளிவந்துள்ளது; பல கேள்விகளுக்கு விடை தருகின்றது!

பத்தாண்டுப் போரின் வரலாறு விளக்கப்பட்டிருக்கின்றது. பல பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டிகள் மூலமும், விடுத்த அறிக்கைகள் மூலமும் கொள்கை என்ன, விளக்கம் என்ன என்பவை தெளிவாக்கப்பட்டிருக்கின்றன.

அரசியல் விடுதலை மாத்திரம் குறிக்கோள் அல்ல. தலைதோர் சமுதாயம் கட்டி எழுப்பப்பட வேண்டுமென்றும், பொருளாதாரம், கலை, பண்பாடுகள் போன்றவை பேணப்பட வேண்டியது அவசியம்.

பல்வேறு கோணங்களில் தலைவரின் சிந்தனை சென்றிருக்கின்றது. அவை எல்லாம் இந்தக் கருத்துப் பெட்டகத்தில் மிளிர்கின்றன.

மறைவாக எமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதிற் பயனில்லை! உலகத் தலைவர்களுக்கு எமது போராட்டச் சிந்தனைகள் தெளிவாக்கப்பட வேண்டும்; தெளிவுபடுத்த வேண்டும்.

அந்த ரீதியில், தலைவர் "இந்து" போன்ற சர்வதேச மதிப்புள்ள பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டிகள் பலரது கவனத்தையும் கவர, இலட்சியத் தெளிவு பெற உதவியுள்ளன.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இங்கு நடந்ததென்ன?

பேச்சுவார்த்தைகள், உண்ணாவிரதங்கள், சத்தியாக்கிரகங்கள், ஒப்பந்தங்கள் போன்ற பல்வேறு ரூபங்களில் தமிழர்கள் தமது மனக் கொதிப்பைத் தெரிவித்தார்கள்.

ஆனால் சிங்கள ஏகாதிபத்தியம் கொடுத்த பதில் கொடூரமான அடக்கு முறையே!

இதற்கு யதார்த்தபூர்வமான முறையில் பதிலடி கொடுத்து, உரிமை பெற்றிட எழுந்த சிந்தனை விளக்கப்பட்டிருக்கிறது.

இ
ன் 30-10-93
று

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த

யா/திருக்குடும்ப கன்னியர் மட

இன்ரறக்ட் கழகம்

இராகமாலிகா இசைக் குழுவினருடன்

இணைந்து வழங்கும்

# இன்னிசை கானம்

நேரம்: மு. ப. 9 மணி, பி. ப. 2 மணி

இடம்: யா/புனித பத்திரிசியார் கல்லூரி

நுழைவுக் கட்டணம்: 100/- 50/- 20/-

குறிப்பு:

நுழைவுச் சீட்டுகளை நுழை வாயிலிலும் பெற்றுக்கொள்ளலாம்.

யா/திருக்குடும்ப கன்னியர் மடம் இன்ரறக்ட் கழகம்

பிரசுர அன்பளிப்பு:

சிவகணேசன் பிடவை மாளிகை
41, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

(ஏ-3516)

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
அருளம்பலம் அரசநாயகம்

தோற்றம்: 12-01-1930

மறைவு: 10-11-1992

திதி: 30-10-1993

திங்கள் முகம்பார்த்த குமுதமென நின்றிருந்தேன்
பௌர்ணமி நினைவிலே அமாவாசை
யென்றிருந்தேன்
குங்குமத்தை அழித்துவிட்டு பூச்சூட மறந்து
விட்டேன்
தங்களடி தொடர தனிமையாய் வாடுகின்றேன்.

மனைவியுடன்
குடும்பத்தினர்.

தேவாலய வீதி,
சங்கானை.

(சி-558)

# இராசிபலன்

30-10-1993
சனிக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 4)

பூரணை மாலை 5-46 வரை, அச்சுவினி மாலை 7-13 வரை, சித்தயோகம், இராகுகாலம் 9-03 முதல் 10-33 வரை. சுபநேரம் மாலை 3-03 முதல் 4-33 வரை, பூரணைவிரதம்.

மேஷம்: தொழில் மேன்மை, உயர்ந்தோர் நட்பு, முகவசீகரம்.

இடபம்: அதிக செலவு, மறைமுக துன்பம், பயண அலைச்சல்.

மிதுனம்: காரியசித்தி, மாதர் உதவி, குடும்ப மகிழ்ச்சி.

கடகம்: நம்பிக்கைமோசடி, தொழில் கஷ்டம், வாய்த்தர்க்கம்.

சிங்கம்: மனக் கவலை, அஜீரண கோளாறு, புதிய நட்பு.

கன்னி: பணக்கஷ்டம், உறவினர் கெடுதி, மனப் போராட்டம்.

துலாம்: நண்பர் சகவாசம், தொழில் ஜயம், அந்தஸ்து.

விருச்சிகம்: நோய் தணியும், மனைவி நன்மை, வரவு வலிமை.

தனுசு: கட்டுப்படுதல், கெட்டவார்த்தை, அவமதிப்பு.

மகரம்: கீழ்ப்படிதல், சோம்பல், குறைந்த வருவாய்

கும்பம்: இனசனப் பகை, அபகோசனை, வெளியார் தலையீடு.

மீனம்- வீட்டிய் துன்பம், குடும்ப பிரிவு, வைத்திய செலவு.

— ஜோஸ்யர்.

## நிதி ஒதுக்கீடு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணப் பிரசந்தியக் கல்வித்திணைக்களம் கோட்ட மட்டத்தில் கல்விக்கண்காட்சியை நடத்தவும், கற்பித்தல் கருத்தரங்குகளை நடத்தவும் ஆறு கோட்டக் கல்வி நிலையங்களுக்கும் 24 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. (154)

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் ஐப்பசி மாதம் 30ம் நாள் (15-11-1993) திங்கட்கிழமை காலை 9-18 மணி முதல் 10-23 மணிவரையுள்ள சுபமங்களவேளையில்,

காரைநகரைச் சேர்ந்த
திரு. திருமதி அ. அப்புத்துரை
அவர்களின்
சிரேஷ்ட புதல்வன்
குகதாசன்
அவர்களுக்கும்

காரைநகரைச் சேர்ந்த
கிளிநொச்சி, சாந்தி வைத்தியசாலை
உரிமையாளர்
டாக்டர் கிருஷ்ணா சுப்பையா
(கொதிமலை உடகெந்தலை பகுதிகளை
சார்ந்த பெருந்தோட்டத்துறை
முந்நாள் தலைமை வைத்திய அதிகாரி)
திருமதி சிவபாக்கியம் சுப்பையா
தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரி
கலாமதி
அவர்களுக்கும்

திருவருள் துணையோடு கொழும்பு, கப்பித்தாவத்தை ஸ்ரீ செல்வமல விநாயகர் தேவஸ்தானத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து இடம்பெறும் விருந்துபசாரத்திலும், இராப்போசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இரு வீட்டாரின் அழைப்பு

இங்ஙனம்

திருமதி அ. அப்புத்துரை

டாக்டர் இ. சுப்பையா,
திருமதி சுப்பையா குடும்பம்,
சாந்தி வைத்தியசாலை, கிளிநொச்சி.

தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்ப முடியாமைக்கு மன்னிக்கவும்.
(சி-556)

தடை எல்லாம் உடைத்திடலாம்
தரிசு நிலமெல்லாம் பயிர் செய்தால்

